
# குரு பூர்ணிமாவும்
# ஸ்ரீ சத்குருதேவரின் ஆசியும்!



பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா

# குருபூர்ணிமாவும்

# ஸ்ரீ ஸத்குருதேவரின் ஆசியும் !

வெளியீடு :

**அன்பின் குடில்,**

253/1, மேட்டூர் – பவானி மெயின் ரோடு,
கோம்பூர், நெரிஞ்சிப்பேட்டை,
அந்தியூர் தாலுக்கா, ஈரோடு மாவட்டம்,
தமிழ்நாடு – 638 311

பதிப்பு :
குருபூர்ணிமா 2017 ஜுலை 9

பிரதிகள் : 500

அட்டைப்படம் :
சுகப்பிரம்ம மகரிஷி, பரீக்ஷித்து மஹாராஜாவிற்கு
பாகவதம் அருளியது.

அச்சிட்டோர் :

**சுபம் பிரிண்டர்ஸ்,**

திருவண்ணாமலை.
போன் : 04175 – 253781.

ஸ்ரீ ஸத்குரு திருவடி துணை!

# பரீக்ஷித்து மஹாராஜா ஞானம் அடைந்த வரலாறு

குருக்ஷேத்திர போரின் முடிவில் **அர்ஜுனனின்** மகன் **அபிமன்யுக்கும்,** உத்தாரைக்கும் மகனாக **பரீக்ஷித்து** அவதரித்தார். தன் கருவில் உள்ள குழந்தையை எதிரிகள் சாகடிக்காமலிருக்க வேண்டும் என்ற உத்தாரையின் வேண்டுதலுக்கு இணங்க ஸ்ரீ கிருஷ்ண பகவானின் பாதுகாப்பில் பிறந்தவர் பரீக்ஷித்து. தன் பாட்டனார் பாண்டுவைப் போல பரீக்ஷித்து மஹாராஜாவும் வேட்டையாடுவதில் ஈடுபாடு கொண்டவர். அவ்வாறு வேட்டைக்கு சென்றபோது ஒரு மானை குறிவைத்து அம்புவிட்டார், அம்பு பட்டதும் அந்த மான் தெய்வாதீனமாக அவரிடம் இருந்து தப்பி ஓடிவிட்டது. அதை துரத்திக்கொண்டு காட்டில் நீண்டதூரம் ஓடியும் பிடிக்க முடியவில்லை. அவருக்கு அப்போது அறுபது வயதிருக்கும். மானை விரட்டி சென்றதால் தண்ணீர் தாகமும், பசியும், களைப்பாக இருந்ததாகவும், அதனால் தண்ணீரைத் தேடி அந்தக் காட்டில்

அலைந்தபோது சமீக் என்ற முனிவரின் ஆஸ்ரமத்தை அடைந்தார். அப்போது அந்த முனிவர் நிஷ்டையில் இருந்ததாகவும், அரசன் அவரிடம் தண்ணீர் கேட்டதாகவும் அவர் பதில் சொல்லாமல் மௌனமாக இருந்ததாகவும், அதை அரசனால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை, அப்போது கலியுக ஆரம்பம் என்பதால் கலிதோஷத்தினால் அவசரத்தில் புத்தி தடுமாறி நிதானமிழந்து தாகத்தையும், பசியையும் பொறுக்க இயலாததால் அரண்மனைக்குத் திரும்ப அரசன் முடிவெடுத்த நிலையில் அரண்மனைக்குச் செல்லும் வழியில் அவன் இறந்த பாம்பைக் கண்டான். தனக்கு உதவாத முனிவரை அவமதிக்க அரசன் இறந்த பாம்பை தன் அம்பால் தூக்கிவந்து முனிவரின் கழுத்தில் மாலை போல் போட்டுவிட்டு அரண்மனைக்குத் திரும்பினான்.

**சமீக்** முனிவரின் மகன் **சிரிங்கி** இதர முனிவரின் பிள்ளைகளுடன் **கௌசிகி** நதிக்கரையில் விளையாடிக் கொண்டிருந்தான். தன் தந்தைக்கு நடந்ததை கேள்விப்பட்டதும் கண்கள் சிவந்து கோபப்பட்டு அந்த பாபச் செயல் செய்தவன் இன்றிலிருந்து ஏழாவது நாள் **தக்ஷன்** என்ற விஷ பாம்பு கடித்து இறக்கக் கடவன் என்று சபித்துவிட்டான். சிரிங்கி கண்களில் நீர்

பெருக்குடன் தன் இருப்பிடம் திரும்பினான். அழுகுரல் கேட்டு நிஷ்டை களைந்த முனிவர் தன்மேலிருந்த பாம்பை தூக்கி எறிந்துவிட்டு தன் மகனைப் பார்த்து ஏன் அழுகிறாய் என்று கேட்டதாகவும், நடந்த நிகழ்வையெல்லாம் கேள்வியுற்ற முனிவர், அரசனுக்கு தன் மகன் கொடுத்த சாபத்தை நினைத்து மனம் வருந்தினார். அரசன் ஒரு சில நொடியில் நிதானமிழந்து செய்த ஒரு சிறிய தவறுக்கு நீ அவரை சபித்துவிட்டாயே உனக்கு பக்குவம் போதவில்லை என்று கூறினார். மேலும் அரசன் ஒரு சிறந்த பக்தன், மிகப்பெரிய புண்ணியவான். பல தானதர்மங்களை செய்துள்ளார். அவருக்கு ஈடான அரசன் யாரும் இல்லை. அவர் தாக சாந்திக்காக இங்கு வந்தார். எம்மால் அவருக்கு உதவ முடியவில்லை. இதனால் மனம் நொந்த அவர் இறந்த பாம்பை எம் கழுத்தில் போட்டார். அதற்குப்போய் அவரை சபித்துவிட்டாயே என்று கூறியதாகவும், இது சமீக் முனிவரின் பெருந்தன்மைக்கு எடுத்துக்காட்டாகவும் இருந்தது.

தன் அரண்மனைக்குத் திரும்பிய பரீக்ஷித்து தன் தலையிலிருந்த தங்க கிரீடத்தை எடுத்து வைத்துவிட்டு தான் செய்த தவறை நினைத்து மனம் வருந்தினார். ஒரு தண்டனை கைதியைப் போல் அவரிடம் நடந்துகொண்டோமே என்று மனம்

வருந்தினான். எனவே, அதற்கு தகுந்த தண்டனையை அனுபவித்துவிட்டால் பாப விமோசனம் கிடைக்கும் என்றும், மீண்டும் அந்த தவறை செய்யாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்தார். அப்போது அரண்மனைக்கு முனிவரின் சீடர் ஒருவர் வந்து அவருக்கு இன்றிலிருந்து ஏழாவது நாள் தக்ஷன் என்ற கொடிய விஷ பாம்பு கடித்து மரணம் சம்பவிக்கும் என்று முனிவரின் மகன் கொடுத்த சாபத்தைப் பற்றி கூறினார்.

அரசன் இந்த சாபத்தை ஒரு வரமாக ஏற்றுக்கொண்டு தன் மகன் ஜனமேஜெயனிடம் ஆட்சி பொறுப்பை ஒப்படைத்துவிட்டு கங்கை நதிக்கரைக்கு வந்து ஊண், உறக்கமற்று தபஸ் செய்தார். அவரின் தபஸைக்கண்டு தேவ ரிஷிகளும், முனிவர்களும், யோகிகளும், ஞானிகளும் அங்கு ஒன்றுகூடினர். தங்கள் தரிசனத்தாலேயே பாபங்களை போக்கி பரிசுத்தமாக்கும் மஹாத்மாக்கள் அனைவரும் வந்திருந்தனர். அவர்கள் அனைவரையும் அரசன் தலைவணங்கி நமஸ்கரித்தான். அரசனின் நமஸ்காரத்தை ஏற்று அனைவரும் அகம் மகிழ்ந்தனர்.

இறக்கப் போகும் ஒருவன் என்ன விதமான பக்தியை கடைப்பிடித்தால்

இறப்பிலிருந்து விடுபடலாம் என்று எமக்கு கூறவேண்டும். ஓ! மஹானுபாவன்களே உங்களை பணிந்து, சரணடைந்து வேண்டிக்கொள்கிறேன். இவ்வாறு அரசன் வினவிக்கொண்டு இருக்கும்போது வியாசரின் புதல்வர் சுகப்பிரம்ம மகரிஷி அவர் சீடர்களுடன் வந்தார். சுகப்பிரம்ம மகரிஷியை வணங்கி அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்தினர். ஒருவராலும் அரசரின் கேள்விக்குப் பதில் கூற இயலவில்லை.

அப்போது பதினாறே வயதான சுகப்பிரம்ம மகரிஷி மஹா தேஜஷ்வியாக இருந்தார். நட்சத்திரங்கள் மத்தியில் ஜொலிக்கும் சந்திரனைப்போல் காணப்பட்ட சுகப்பிரம்ம மகரிஷியை வணங்கி அனைத்து பாபங்களிலும் இருந்து விடுபட்டு பிறவா நிலையை பெறுவது எப்படி என்று கனிவு கூர்ந்து எனக்கு உபதேசிக்க வேண்டும் என்று பரீக்ஷித்து கேட்டுக்கொண்டார்.

எதைக் கேட்க வேண்டும், எதை ஜெபிக்க வேண்டும், எதை வணங்க வேண்டும் என்று கருணை புரிய வேண்டும் என்று அரசன் வேண்டினார்.

அதற்கு சுகப்பிரம்ம மகரிஷி சம்சார சாகரத்திலிருந்து விடுபட வேண்டுமானால்

ஸ்ரீமத் பாகவதத்தை கேட்டு பக்தியோடு இருந்தாலே போதும் என்று கூறினார். இந்த பாகவதம் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா நாரதருக்கும், நாரதர் வியாசருக்கும், வியாசர் சுகப்பிரம்ம மகரிஷிக்கும் கூறியது ஆகும்.

அந்த ஏழு நாட்களும் சுகப்பிரம்ம மகரிஷி அரசனுக்கு பாகவதத்தை ரிஷிகள் புடைசூழ எடுத்துக் கூறினார். இது இந்த உலக வாழ்விலிருந்து பேரின்ப வீட்டிற்கு வழிகாட்டியது.

அந்த கதையின் முடிவில் சுகப்பிரம்ம மகரிஷி, எண்ணற்ற பிறவிகளில் தீயிலிட்ட புழுவைப் போல இருப்பவர்களுக்கும், உலக இச்சைகளால் சூழப்பட்ட சமுத்திரத்தில் மூழ்கி இருப்பவர்களுக்கும், கரையேற்றும் படகாக இருப்பது பாகவதமும், பக்தர்களின் புராணமும் ஆகும். இவற்றையெல்லாம் கேட்ட அரசன் அடியற்ற மரம்போல் வீழ்ந்து வணங்கினான்.

பிரபோ! என்னே உங்கள் கருணை! உங்களால் தன்யன் ஆனேன். வாழ்வின் அர்த்தம் தெரிந்துகொண்டேன். கிருஷ்ண பகவான் மற்றும் பக்தர்களின் சரித்திரங்களை கேள்வியுற்றேன். என் அறியாமை அகன்றது, என்னை அறிந்தேன், உண்மையை உணர்ந்தேன். குருதேவா! இப்போது தக்ஷன்

மீதிருந்த பயம் என்னைவிட்டு நீங்கியது, பிறப்பு இறப்புகளைப் பற்றி எனக்கு கவலை இல்லை. ஏனெனில் நித்ய, சுத்த, முக்தன் என்று உம்மால் உணரப் பெற்றேன். எனவே என் பேச்சு, செயல் அனைத்தும் இறை சிந்தனையுடன், பாகவதோத்ம சேவையில் லயித்து உலக இச்சையிலிருந்து விடுபட வேண்டும் என்று கூறி அழுதார். பின் முனிவர்கள் அனைவரும் அவ்விடம் இருந்து மறைந்தனர்.

ஏழாவது நாள் அரசனை கடித்துக் கொல்ல தக்ஷன் சென்றது. அப்போது வழியில் ஒரு பிராமணனை கண்டது. அவனை யார் என்று கேட்டது. அவன் தன்னுடைய பெயர் **காஷ்யப்** என்றும், அரண்மனைக்கு சென்று தக்ஷனிடமிருந்து அரசனை காப்பற்ற இருப்பதாகவும் எத்தகைய கொடிய விஷமாக இருந்தாலும் அதிலிருந்து என்னால் காப்பற்ற முடியும் என்றும் கூறினான். இதைக் கேட்ட அந்த பாம்பு தன் விஷத்தை யாராலும் நீக்கமுடியாது என்றது. அவன் தன்னிடம் அதற்கு மாற்று உத்தி இருப்பதாக கூறினான். அவன் உறுதியை சோதிக்க எண்ணியது பாம்பு. அங்கிருந்த மரத்தில் தன் விஷத்தை கொட்டியது. விஷம் பட்டதும் அந்த மரம் பஸ்பமானது. அந்த பிராமணன் சில மந்திரங்களை கூறி மீண்டும் அந்த மரத்தை

முன்போல ஆகச்செய்தான். இதைக் கண்ட அந்த பாம்பு, நீ அரசனை காப்பாற்றினால் உன்னை பாராட்டி கொடுக்கும் அத்தனை செல்வங்களையும் இப்போதே தருகிறேன். நீ அரண்மனைக்கு போக வேண்டாம் என்று கூறி செல்வங்களை கொடுத்து, அவனை திருப்பி அனுப்பியது. பிறகு அவனும் வீடு திரும்பி விட்டான்.

அரண்மனையை நோக்கி சென்ற பாம்பிற்கு உள்ளே செல்ல முடியாமல் பலத்த பாதுகாப்போடு இருந்தான் பரீக்ஷித். அப்போது அந்த பாம்பு அரசனுக்கு எடுத்துச் செல்லும் பழக்கூடைக்குள் கூட்டுப் புழுவாக மாறி உள்ளே சென்று அரசனை தீண்டியது. அரசன் மரணமடைந்தான். அவன் உடல் பஸ்பமானது. அரசனின் மரணத்தை கேள்வியுற்று பூலோகத்தினரும், சொர்க்கத்திலிருப்பவர்களும் அதிர்ச்சியுற்று, வருந்தி கண்ணீர் விட்டனர். கந்தர்வர்களும், கிங்கனர்களும் மலர்கள் தூவினர். உடல் ''நான்'' என்னும் பிரமையிலிருந்து அரசன் விடுபட்டு முக்தி பெற்றார்.

ஆகவே, மெய்யன்பர்களே! அந்த பரீக்ஷித்துக்காவது ஏழுநாட்கள் உயிருடன் இருப்பார் என்ற உத்திரவாதம் இருந்தது. ஆனால் நமக்கு ஒரு வினாடி கூட உயிரோடு

இருப்போம் என்ற உத்திரவாதம் இல்லை. ஏழாவது நாளில் மரணம் அடைந்துவிடுவோம் என்று அறிந்த பரீக்ஷித் தன் மனைவி, மக்களையும், நாட்டையும், அரச பதவியையும் துறந்து பிறவா நிலையைத் தேடி ஸத்குருவாகிய சுகப்பிரம்ம மகரிஷியிடம் ஞான உபதேசம் கேட்டு ஏழே நாளில் ஆத்ம ஞானத்தை அடைந்தார்.

## ஆனால்......

ஆத்ம சாதகர்களாகிய நாம், அடுத்த வினாடி கூட உயிருடன் இருப்போமா? என்ற உத்திரவாதம் இல்லை என்று தெரிந்திருந்தும், சுகப்பிரம்ம மஹரிஷியின் அம்சமான நம் ஸ்ரீ ஸத்குருதேவர் நமக்கு பல மஹான்களின், பக்தர்களின் சரித்திரங்கள் மற்றும் தமது ஸ்வய அனுபவத்தையும், புத்தகங்கள், கடிதங்கள் வாயிலாகவும், நேரடியாக பல ஸத்சங்கங்கள் மூலமாகவும் அந்த ஸத்தியத்தை நோக்கிச் செல்ல பலமுறை வலியுறுத்தி உபதேசம் செய்துள்ளார். எனவே ஸ்ரீ ஸத்குருதேவரின் உபதேசங்களைப் பின்பற்றி நாம் பரீக்ஷித்தைப் போல ‘‘அந்த ஒன்று’’ ஆவோம் என இந்த குருபூர்ணிமா நன்நாளில் உறுதி எடுத்துக் கொண்டு ‘‘**சொல்லற சும்மா சுகமாக**’’ இருப்போமாக.

# ஸ்ரீ ஸத்குருதேவரின் முடிவான முக்தியான ஆசியுரை

குழந்தைகளே!

‘குரு பூர்ணிமாவான இன்று உண்மைத் தொண்டர்களின் **வைராக்ய பிரதிக்ஞையே ஸ்ரீ ஸத்குரு காணிக்கையாகும்**’!!!. எவரையும் அடக்காமல், நாம் அடங்கி, இப்படி நடப்போம், இப்படி இருப்போம், அது ஆகுவோம் என்பதே உங்கள் பிரதிக்ஞையாகும்!.

## அ) அன்பாகவும் அறிவாகவும் இருப்பீர்களாக!

**அன்பாக இருக்கும் நிலை:**

எந்த ஒரு ஜீவனிடத்திலும், எந்த சூழ்நிலையிலும் குற்றம் குறையோ, விருப்பு வெறுப்போ, பேதமோ காணாமல் எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் தன்னையே இழப்பது அன்பாக இருக்கும் நிலை.

**அறிவாக இருக்கும் நிலை:**

எல்லா நாம, ரூபத்திற்குள்ளும் இறைவனே அந்தர்யாமியாக இருந்துகொண்டு எல்லா செயல்களையும் அதனதன் வினைக்கு தக்கபடி எவ்வித பாரபட்ச தோஷமில்லாமல் நடத்திக்கொண்டு வருகிறான் என்றும் எந்த செயல்களுக்கும் எந்த ஜீவனும் பொறுப்பல்ல என்றும் எல்லாம் ஒருவனே! ஒருவன் செயலே! ஒருவன் பொருளே! என ஒன்றுபடுத்தி அந்த உண்மை உணர்வில் இருப்பதுவே அறிவாக இருக்கும் நிலை.

## ஆ) ஆதரவுடனும் ஆற்றலுடனும் இருப்பீர்களாக!

**ஆதரவுடனும் இருக்கும் நிலை:**

ஓர் முதியவர் தள்ளாடாமல் நடக்க எப்படி ஓர் ஊன்றுகோல் ஆதரவாக இருக்கிறதோ, ஒரு கொடியானது காற்றில் ஆடாமல் பந்தலில் படர்வதற்கு ஒரு குச்சி ஆதரவாக இருக்கிறதோ அதேபோல் ஒரு சாதகன் இல்லாத தன் வாழ்க்கையில் அன்றாடம் நடக்கக்கூடிய நிகழ்வுகளில் மன அசைவு இல்லாமல் சர்வார்ப்பண நிலையில் நம் ஸ்ரீ ஸத்குருதேவரின் உபதேச கருத்துக்களை

ஏற்று எல்லாம் நீ! என்றும் அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்றும் நம்பிக்கை வைராக்கியத்துடன் இருக்கவேண்டும். நாம் பிறரை சந்தித்தாலோ அல்லது பிறர் நம்மை சந்தித்தாலோ மற்ற ஜீவர்களைப்பற்றி குற்றம், குறை பேசினால் நாம் அவர்களுடன் சேர்ந்து குற்றம், குறை பேசாமல் ஸ்ரீ ஸத்குருதேவரின் உபதேச கருத்துப்படி எல்லாம் ஒருவனே! என்றும் எல்லாம் ஒருவன் செயலே என்றும் ஒருவன் பொருளே என்றும் யாரிடமும் எந்த குற்றம் இல்லை என்றும் எல்லோரும் நல்லவரே! எல்லோரும் நம்மவரே! எல்லாம் நன்மைக்கே! என்று எடுத்துக்கூறி மேலும் பேசவிடாமல் நம் ஸ்ரீ ஸத்குருதேவரின் மேற்படி உண்மை கருத்துக்களை உணர்த்தும் நிலையே ஆதரவுடன் இருக்கும் நிலை ஆகும்.

**ஆற்றல் என்பது :**

ஒரு சாதகன் முழு சரணாகதியினால் எவரிடத்திலும் அன்பாகவும், அறிவாகவும் இருந்துகொண்டு நம் ஸ்ரீ ஸத்குருதேவரின் உபதேசக் கருத்துக்களை ஆதரவாக எடுத்துக்கொண்டு முழு நம்பிக்கை, உறுதி, வைராக்கியத்துடனும் மிகுந்த பொறுமையுடனும் இருப்பானாகில் அவனை அறியாமலே இறைவனோ அல்லது நம் ஸ்ரீ ஸத்குருதேவரோ

**(இரண்டும் ஒன்றே)** கீழ்கண்ட ஆற்றல்மிக்க செயல்களை நடத்தி தம்முடைய பக்தர்களின் அல்லது சீடர்களின் வாக்கை காப்பாற்றியுள்ளனர்.

1. நாம தேவரும், ஞானேஸ்வரரும் யாத்திரையின் போது இறந்துபோன கன்றினை உயிர்பிக்க செய்தது.

2. புண்டரீகன் தன் பெற்றோர்களுக்காக பீமா நதியை சந்திரபாகா நதியாக பிரித்தது.

3. ஞானேஸ்வரர் எருமை மாட்டை வேதம் சொல்ல சொன்னது.

4. கபீர், கோரக் என்ற அரக்கனுடன் சண்டையிட்டு வெற்றிபெற்றது.

## இ) இனிமையுடனும் இதமாகவும் பேசுவீர்களாக!

நாம் எவரிடம் பேசினாலும் நம்டைய உடல் அல்லது உலகத்தைப் பற்றி பேசுவோம் இவை உண்மையா என்றால் இல்லை என்பதே ஸத்தியம். அப்படி இல்லாத உடல், உலகத்தைப்பற்றி பேசுவதால் நமக்கு இன்பம் அல்லது துன்பம்தான் கிட்டும். இதுவும்

உண்மையா என்றால் இல்லை எனவே எது உண்மை என்றால் இவை அனைத்திற்கும் மூலகாரணமான இறைவன் உண்மை! இதை நாம் சாதனைக்கு எடுத்துக்கொண்டு எதைக் கொடுத்தாலும், எதை வாங்கினாலும், எதைப்பேசினாலும் இறைவன் நாமாவை முன்வைத்து இனிமையாகவும், சாந்தி சமாதானமாகவும், மிகுந்த பொறுமையாகவும் இறை உணர்வோடு பேசிப் பழகினால், வினை பிறரையும் தாக்காது, நம்மையும் சூழாது மனம் இதமாகவும், குளிர்ச்சியாகவும் இருக்கும்.

## ஈ) ஈகையுடனும் ஈர்ப்புடனும் நடப்பீர்களாக!

ஈகை என்பது ஒருவன் மற்றவனுக்கு சர்வார்ப்பண நிலையில் நான், எனது அற்று பகவான் பொருளை பகவானுக்கே கொடுக்கிறோம் என்ற நிலையில் கொடுப்பது ஆகும். கொடுப்பது இரண்டு வகைப்படும். ஒன்று உணவு, உடை, இருப்பிடம், பண்டப் பொருட்கள் கொடுப்பது. இது புண்ணியம் செய்வது ஆகும். இதற்கு பிறவி உண்டு. இரண்டாவது ஒருவன் பிறருக்கு ஸத்தியம் பேசி உண்மை நிலையை உணர்த்துவது தர்மம் ஆகும். இதற்கு பிறவி இல்லை. எனவே நாம் எவரிடம் பேசினாலும் உடல், உலக வார்த்தைகளை பேசாமல் நம் ஸ்ரீ ஸத்குருதேவரின் உபதேச கருத்துப்படி

ஸத்திய வாக்கை தர்மம் செய்ய வேண்டும். எப்படி என்றால் நாம் வாழவரவில்லை. சாதனை செய்ய வந்தவர்களே. எனவே இல்லாத இந்த வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் மனம் பாதிப்பு அடையும்போது எல்லாம் ஒருவனே! எல்லாம் ஒருவன் செயலே! எல்லாம் ஒருவன் பொருளே என்றும், அவனன்றி ஒரு அணுவும் அசையாது என்ற ஸத்திய வாசகங்களை ஒருவர்கொருவர் பேசி மனம் அமைதி அடைந்து பிறகு அந்த மனதை இல்லாமல் செய்து மேற்படி ஸத்ய வாசகத்தில் எப்போதும் நிலைத்திருப்பது ஈர்ப்புடன் நடப்பதாகும்.

## உ) உண்மையுடனும் உணர்வுடனும் இருப்பீர்களாக!

உண்மை எது என்ற உணர்வு நமக்கு தைலதாரைபோல் இருக்க வேண்டுமென்றால் முதலில் எது பொய் என்று அறியவேண்டும். அதாவது வந்து, இருந்து, மாறி மறையக்கூடிய அனைத்து நாம ரூப வஸ்துக்களும் நிலையானது அல்ல பொய்தான் என்று தெளிவாகிறது. ஆனால் நாம் அந்த நாம ரூப மயக்கத்தில் இருந்து பூரணமாக விட்டு விலக முடியாமல் தவிக்கிறோம். இந்த நாம ரூப மயக்கம் தீர வேண்டுமானால் 1. அனைத்து நாம ரூபங்களையும் இறை சொரூபமாக காண

வேண்டும். 2. பின் அந்த இறைவனும், நாமும் ஒன்றென புத்திபூர்வமாக அறிய வேண்டும். 3. பின் அறிந்த நம்மையும், அந்த பரத்தையும் அறிவுபூர்வமாக உணர வேண்டும். 1. பகவானாக பார்த்தால் நிலை வேறு, 2. குருவாக பார்த்தால் எப்போதும் மேலான நிலையில் இருந்து இறங்காது, 3. திருமூர்திகளை யாரைப் பார்த்தாலும் குருவாக பார்த்தால் எந்த பிரச்சனையும் இல்லை விஷய குண தோஷங்கள் பற்றாது. முடிவாக அதுவே நாம்! நாமே அது! என்ற உண்மை உணர்வில் இருக்க வேண்டும். இதுவே **உண்மையுடனும் உணர்வுடனும்** இருப்பதாகும்.

## ஊ) ஊற்றாகவும் ஊக்கத்துடனும் துலங்குவீர்களாக!

**ஊற்றாக இருக்கும் நிலை :**

பொதுவாக ஊற்று என்பது தண்ணீரைக் குறிக்கும். அது பூமிக்கு அடியில் எப்போதும் ஓர் பிரவாகமாக ஓடிக்கொண்டே இருக்கும். அதே போல் எல்லா ஜீவர்களுக்குள்ளும் ஆத்மா அந்தர்யாமியாக நிறைந்துள்ளது. பூமிக்கு அடியில் உள்ள ஊற்றை வெளியே கொண்டுவர கிணறு வெட்டி ஊற்றை மறைத்துள்ள மண்ணை வெளியே எடுத்துவிட்டால் எப்படி ஊற்று தாமே

வெளிப்படுகிறதோ அதேபோல் நமக்குள்ளே உள்ள ஆத்மாவை மூடியுள்ள நான், எனது என்ற மனத்திரையை நீக்கிவிட்டால் அந்த உண்மை உணர்வாகிய ஊற்று தாமே வெளிப்படும்.

**ஊக்கத்துடன் இருக்கும் நிலை :**

ஓர் சாதகன் தனது லட்சியமான ஜீவன் முக்தியை அடைய அந்த உண்மை உணர்வில் ஊக்கமுடன் இருக்கும்போது நம் ஸ்ரீ ஸத்குருதேவரின் ஸத்திய வாசகங்களான **எல்லாம் நீ**! என்றோ **இருப்பது ஒன்றே**! **நடப்பது நலமே**! என்றோ **அவனன்றி ஓர் அணுவும் அசையாது** என்றோ **எல்லாம் ஒருவனே**! **ஒருவன் செயலே**! **ஒருவன் பொருளே**! என்றோ **அதுவே நாம்**! **நாமே அது**! என்றோ இன்னும் அனேக ஸத்திய வாசகங்கள் தைலதாரை போல் நமக்கு நினைவில் இருக்கும். மற்றவர்களுக்கும் மேற்படி வாசகங்களை கருத்து பரிமாற்றத்தின்போது எடுத்துக் கூறுவோம். ஆனால், ஏதாவது ஒரு பிரச்சனை நமக்கு ஏற்பட்டால் மேற்படி ஸத்திய வாசகங்கள் மறைபட்டுபோகிறது. சிலருக்கு மேற்படி ஸத்திய வாசகங்கள் நினைவில் இருந்தாலும்கூட அந்த பிரச்சனைக்குண்டான நாம, ரூபத்தின் மீதுதான் நமக்கு குற்றம் குறையாகவும், விருப்பு வெறுப்பாகவும்

தோற்றுகிறது. இது போன்ற சூழ்நிலையில்தான் நாம் மேற்படி ஸத்திய வாசகங்களை நம்மைடைய இல்லாத மனதிற்கு எடுத்துக்கூறி மனதை தளர்வு அடையாமல் ஊக்குவித்து உறவாடி கெடுக்கவேண்டும். எனவே ஸத்திய வாசகங்கள் தெரிந்திருந்தால் மட்டும் போதாது. அதை செயல்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும். எப்படி என்றால் ஒரு பித்தளை பாத்திரமோ, செம்பு பாத்திரமோ, இரும்போ மற்றும் சில பொருட்களோ உபயோகத்தில் அதாவது செயல்பாட்டில் இருந்தால்தான் அது அதன் தன்மை மாறாமல் துலங்கும். இல்லாவிட்டால் அதன் உண்மைத் தன்மைமாறி களிம்போ, துருவோ பிடித்து குறுகிய காலத்திலேயே அது பயனற்றதாகிவிடும். அதேபோல் நமக்கு ஸத்திய வாசகங்கள் தெரிந்திருந்தால் மட்டும் போதாது அதை செயல்பாட்டிற்கு அதாவது நம்மைடைய ஸ்வய அனுபவத்திற்கு கொண்டுவர வேண்டும். அப்போதுதான் நாம் துலங்க முடியும். அதாவது பிரகாசமாக இருப்போம்.

## எ) எங்குமாய் ஆனால் எண்ணமற்று சுகிப்பீர்களாக!

**எங்குமாய் :**

எங்குமாய் நீக்கமற நிறைந்து இருப்பது

அந்தப் பரம்பொருளே! என்ற உண்மை நிலையில் நிலைபெற ஒட்டாமல் செய்வது நம்முடைய எண்ணமே. அதற்கு ஒரே வழி எண்ணத்தால், கற்பனையால், மோகத்தால் தோன்றும் பந்தத்தை விவேகத்தால் தீக்ஷண்ய அறிவால் அதாவது ஓர்மையால் ஒன்றுபடுத்திவிட்டால் அங்கு அறிவே பிரகாசிக்கும். அதாவது எண்ணம் ஓய்ந்த இடத்திலே இறைவன் வந்து தோன்றுவான் என்ற உண்மை சாத்தியமாகும். பிறகு நாம் அந்த ஒன்றில் நிலைத்து **அதுவே நாம்**! **நாமே அது**! என்று சொல்லற சும்மா சுகமாக இருப்போம்.

## ஏ) ஏகாந்தமாய் அந்த ஏக்கத்துடனும் இயங்குவீர்களாக!

சாதனையாளர்கள் சிலகாலம் எவருடனும் கூடாமல் தனிமையில் ஏகாந்தமாக இருந்து கலக்கம், பயம் இல்லாமல் நாம் அந்த ஒன்றே! என எண்ணி, எண்ணி மற்ற எண்ணங்களையெல்லாம் கெடுத்து மனம் பேசா மௌனமாய் இருக்கப் பழக வேண்டும். பிறகு சிலகாலம் இப்படியே பழகிவந்தால் மனம் தன்வசம் ஆகும். இப்படி தனிமையில் இருக்கும்போது பழைய வாசனையின் குணங்கள் நம்மை அலைக்கழிப்பது தெரியவரும். அப்போது மனம் சோர்வு

அடையாமல் மீண்டும், மீண்டும் தனிமையில் இருந்து சாதனை செய்தால் அது அனுபவமாகி சகஜ சமாதி கூடும். இங்கு தனிமை என்று சொன்னது உடல் அல்ல. தனிமை என்பது எது என்றால் உள்ளம் தனிக்க வேண்டும். அதாவது உலகத்துடனும், உறவுடனும், கணவன், மனைவி, குழந்தைகளுடனும், பொன், பொருள், தொழிலுடனும் நம் உடல் பின்னிப் பிணைந்து விளையாட வேண்டும். ஆனால் நம் மனம் மட்டும் அந்த பின்னலுக்குள் நுழையக்கூடாது. முடிவாக எல்லா நாம, ரூபங்களும் அந்த ஒன்றுக்குள் அடக்கம் என்றும் அந்த ஒன்றுக்கு அன்னியமாய் எதுவும் இல்லை என்றும் அதுவே நாம்! நாமே அது! என்ற ஏக்கத்துடன் இயங்கவேண்டும்.

## ஐ) ஐயமற்று அந்த ஒன்றில் ஐக்கியமாய் அமர்வீர்களாக!

நாம் ஜீவனல்ல, நாம் அந்த ஒன்றே! என்பதில் எந்தவித சந்தேகம் இல்லை. இதற்கு நம் குருதேவர் பல உதாரணங்கள் கூறி விளக்கியுள்ளார். அதில் ஒன்று குறிப்பாக சமுத்திர ஜலம், குட ஜலம், குவளை ஜலம். இந்த குட ஜலம், குவளை ஜலம் இரண்டும் சமுத்திர ஜலத்திற்கு அன்னியமில்லை என்ற உதாரணம் அனைவரும் அறிந்ததே. இதில் நாம் ஜீவனல்ல

என்பதில் எவ்வித சந்தேகம் இல்லை. ஆனால் நம் ஸ்ரீ ஸத்குருதேவரின் உபதேச கருத்துப்படி அதுவே நாம்! நாமே அது! என்று அந்த ஒன்றில் ஐக்கியமாக நமக்கு நம்முடைய எண்ணமே தடையாக உள்ளது. இந்த தடையை நீக்க வேண்டுமானால் நமக்கு அன்றாடம் நடக்கக்கூடிய நிகழ்வுகளில் இது ஏன் இப்படி நடக்கிறது? என்று கற்பனை பண்ணாமல் எண்ணமற்று எல்லாம் அவன் செயல் என்று சாட்சியாக இருந்தால் அந்த ஒன்றில் ஐக்கியமாகி அமரும் நிலையாகும்.

## ஓ) ஒன்றில் ஒன்றாய் ஒப்புவமை இல்லாததாய் ஆகுவீர்களாக!

நாம் என்றால் இருமை. அங்கு பகவானையும் நம்மோடு இணைத்த நிலையாகும். இணைந்தால் பிரியலாம் (பிரிந்து விடலாம்) யாம் என்றால் ஓர்(ரு)மை. இங்கு காலாதீத பரத்தோடு நாம் கலந்த நிலையாகும். இரண்டறக் கலந்தால் பிரிக்க முடியாது. (தண்ணீரில் கலந்த உப்பு மற்றும் சர்க்கரையை பிரிக்க இயலாது) இவ்வாசகங்களை ஸத்தியமாய் உணர வேண்டும். இது நினைவில்லாத அதாவது எண்ணமில்லாத இடம். இது ஓர் வெற்றிடம் அதாவது சுத்த சூனியம்! எண்ணம் உள்ள இடம் லோகமாயா, எண்ணமற்ற இடம் யோகமாயா.

அது அகண்டம், நிஷ்டை, ஞானம், சகஜம், பிரம்மம், சுத்த சிவம் என கூறப்படும். நம் இருப்பை நாம்தான் உணரலாம். காணவோ, கேட்கவோ, பேசவோ எவராலும் முடியவே முடியாது. இது ஒன்றில் ஒன்றான நிலை. ஒப்புவமை இல்லாதது என்பது நமக்கு அன்னியமாய், எவரும், எவனும், எவளும் இல்லை. சுத்தசூனியம் எனக் கூறப்படும். எண்ணமற்ற இந்த இடம் யோகமாயாவின் பிறப்பிடம், இருப்பிடம், சிறப்பிடம். ஆகவே இந்த இடம் காலாதீத பரத்தின் ஆலயம்.

## ஓ) ஓம்காரமாய் உடல், உலக, தெய்வீகமற்று ஓய்வு பெறுவீர்களாக!

ஓர் சாதகன் ஓம்காரத்துள் ஒலியாய் நிறைய வேண்டும் என்றால் முறையாக பிரணவத்தைப் பற்றிக் கொண்டு மற்றும் அனைத்தையும் விடுத்து ஏகாக்கர சித்தர்களாய் நான்கு மஹா வாக்கியங்களையும் முறையே நன்கு உணர்ந்து அதன் உட்புகுந்து ஸ்வய அனுபவம் பெற்று ஸகஜமாகவே நிலைக்க வேண்டும்.

## நான்கு மஹா வாக்கியங்கள்

1. ரிக் வேதத்தின் கடைசியிலுள்ள ஐதரேய உபநிஷத்தில் வருவது '**பிரக்ஞானம் பிரம்மம்**' (உயர்ந்த அறிவே பிரம்மம்)

2. யஜுர் வேதத்தின் கடைசியிலுள்ள ப்ருஹதாரண்ய உபநிஷத்தில் வருவது **அஹம் பிரம்மாஸ்மி** (நாமே பிரம்மமாக இருக்கின்றோம்)

3. சாம வேதத்தின் கடைசியுள்ள சாந்தோக்ய உபநிஷத்தில் வருவது **தத்-துவம்-அஸி** (நீ அதுவாக இருக்கின்றாய்)

4. அதர்வண வேதத்தில் கடைசியிலுள்ள மாண்டூக்ய உபநிஷத்தில் வருவது **அயம் ஆத்மா பிரம்மம்** (எனது ஆத்மாவே பிரம்மம்) இங்கு மஹா வாக்கியங்களைப் பற்றி சுருக்கமாக கூறப்பட்டது.

ஓர் இருப்பை மட்டும் உடைய காலாதீத பரத்திற்கு ஒலி (சப்தார்த்த) வடிவில் விளக்கம் கொடுப்பதில் யோகமாயா பர அம்ஸ நிழலாக அமைந்திருப்பதால் அதாவது க்ஷர, அக்ஷர வடிவிலும் (வரிவடிவம், வாக்கு வடிவம்) சராச்சர

வடிவிலும் (அசைவன, அசையாதன) நாம, ரூப, ஜக, ஜீவ, ஈச உலகம் அமைந்திருப்பதாலும், காலாதீத பரம் மேலே கூறியவைகள் மூலமாக விளங்கப்படுவதாலும், துலங்கப்படுவதாலும் நாம, ரூப, ஜக, ஜீவ, ஈச தோற்றம் அனைத்தும் காலாதீத பரத்திற்கு ஆலயம் என ஆதி ஸ்ரீமஹான்களால் உணர்த்தப்படுகிறதென, உணர்வால் உணர வேண்டும். மேலே கூறியவைகள் அனைத்தும் அழிந்து மறைந்தாலும் சுத்த சூனியமாகிய யோகமாயா மட்டும் தனித்திருந்து அதுவும் சில நொடிகளில் காலாதீத பரமாகிய அகண்டப் பேரொளியில் கலந்து மயமாகிவிடும். ஆகவே எண்ணமற்ற இடத்திலும் **அது நாம்**! **நாம் அது**! என்ற அறிவில் பிரம்மான்ம பாவனையை வைக்க வேண்டும். அது எண்ணமல்ல என அறிவின் உணர்வால் உணர்க.

உடல், உலக, தெய்வீகத்தில் ஓய்வு என்பது இதுவரை நம் உடல் பற்றியோ, உலகத்தைப் பற்றியோ, தெய்வீகத்தைப்பற்றியோ இருந்துவந்த சிந்தனைகள் அதாவது கற்பனைகள் மற்றும் எண்ணங்கள் இல்லாமல் இருப்பதுவே மனதற்றநிலை. இதுவே ஓய்வுபெற்ற நிலை.

## ஔ) ஔஷதமில்லாமல் அழிவில்லாமல் அது ஆகுவீர்களாக!

ஔஷதம் என்பது உடல் பிணியை நீக்கக்கூடிய ஒரு மருந்து ஆகும். இது உடல் சம்பந்தப்பட்டது. அழிவில்லாமல் என்பது ஆத்மா சம்பந்தப்பட்டது. ஆத்மாவிற்கு என்றும் அழிவில்லை எனவே நாம் நம் ஸ்ரீ ஸத்குருதேவரின் ஸத்திய வாக்குப்படி நாம் உடல் அல்ல, நாம் அந்த ஒன்றே! என்ற திட உறுதி, நம்பிக்கையினால் அதுவே நாம்! நாமே அது! என்ற உண்மை உணர்வில் இருந்துகொண்டு முடிவாக இயங்கும் நிலையில், எல்லாம் பதுமைகளாகவும், பொம்மலாட்டமாகவும் கண்டு இயக்கமற்ற நிலையில் எல்லாம் மண்ணாக உணர்வது அது ஆன நிலை.

## ஃ) ஃதொன்றாய் ஃதில்லாததாய் ஆனால் அது ஆகுவீர்களாக!

பிரம்மம் உள்ளது என்றோ அல்லது இல்லை என்றோ விவரிக்காமல் மண்ணில் பாண்டம் இல்லை ஆனால் மண் இல்லாமல் பாண்டம் இல்லை என்ற நிலையில் ஜீவன் முக்தியாகிய பரமார்த்தீகநிலையை பெற்றுவிட்டால் நம் இருப்பை நாமே உணர்ந்த நிலையில் அதாவது

அகண்டானந்த நிலையில் எந்த வினாடியும் எந்த பயிற்சியும், முயற்சியும் இல்லாமல் நாம் நாமாய் அதாவது யாம் யாமாய் அகண்டப் பேரொளியாய் சர்வசதா இருக்கும் நிலை. இந்த சகஜ நிலை பெற்றுவிட்டால் இங்கு அந்த ஒன்று இருக்கிறது என்றோ, அந்த ஒன்று இல்லை என்றோ இதை சொல்வதற்கு அன்னியமாக எவரும், எதுவும் இல்லை.

இந்த மஹத்தான அமைதி நிலையே நம்முடைய இயல்பு நிலை. ஆகையால் அங்கு முக்தி அருள்பவனும் இல்லை, முக்திக்கான சாதனையும் இல்லை, முக்தியும் இல்லை.

**சாதனை என்றால் சொல்லற சும்மா சுகமாக இருப்பது!**

**ததாஸ்து!**



**எல்லாம் நீ! எல்லாம் நீ!! எல்லாம் நீ!!!**

குரு பணியில்,

**அன்பின் குடில் நிர்வாகம்**


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Abode of Love
You Are Everything!